தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
27.2.2026 (வெள்ளிக்கிழமை)

ஜிப்மர் சார்பில்

# உடல்தானம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி

காரைக்கால், பிப்.27–

காரைக்கால் ஜிப்மர் கிளையில் உடற்கூறியல் துறை சார்பில் உடல் தானத்தின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. உடற்கூறியல் துறை பொறுப்பு அதிகாரி டாக்டர் சரண்யா தலைமை தாங்கினார்.

மாவட்ட குழந்தைகள் மேம்பாட்டு திட்ட அலுவலர் கிருஷ்ண வேணி, காரைக்கால் ஜிப்மர் தலைவர் டாக்டர் பாலமுருகன் ஆகியோர் உடல் தானம் குறித்து பேசினர். நிகழ்ச்சியில் சமூக பணியாளர் ஜெபின் மற்றும் 50–க்கும் மேற்பட்ட அங்கன்வாடி பணியாளர்கள், தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர். யாரேனும் தங்கள் இறப்புக்கு பின் உடல் தானம் செய்ய விரும்பினால் ஜிப்மர் ஆஸ்பத்திரியை தொடர்பு கொள்ளலாம் என்று நிகழ்ச்சியில் தெரிவிக்கப்பட்டது.